## மாகாண வீதிகள் செயற்திட்டம் (வடக்கு மாகாணம்)- பகுதிகள் ஏ.3 மற்றும் பீ.3 (பிஆர்பி) - 2013

மாகாண வீதிகள் செயற்திட்டம் (வடக்கு மாகாணம்)- பகுதிகள் ஏ.3 மற்றும் பீ.3 (பிஆர்பி) என்பவற்றின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் (ஐடிஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2010 சனவரி 11 ஆந் திகதிய 4630 –எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் 2 ஆம் பட்டியலின் 11(பீ), 3 ஆம் பிரிவு மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) வடக்கு மாகாண சபைக்கும் (என்பிசீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2010 மே 23 ஆந் திகதிய அமுலாக்கல் உடன்படிக்கையின் 2.01 (பீ) பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி என்பன

செயற்திட்டத்தின் நிதியளிப்பு உடன்படிக்கை மற்றும் அமுலாக்கல் உடன்படிக்கையின்படி, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கையின் வட மாகாணசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. செயற்திட்டமானது வட மாகாண சபையில் தாபித்த செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவினூடாக (பிஎம்யூ) அமுலாக்கப்படுகின்றது. முன்னேற்றப்பட்ட வீதி உட்கட்டமைப்பினை நிலையாக முகாமைத்துவம் செய்வதனூடாக இலங்கயில் வட மாகாணத்தில் சமூக – பொருளாதார நிலையங்களிற்கான நுழைவுப் பாதைகளை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். மேற்குறிப்பிடப்பட்ட உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் எஸ்டிஆர் 66,100,000 ஆனதுடன் முழுத் தொகையும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 மார்ச் 31 இல் தொடங்கியிருந்ததுடன் 2015 மார்ச் 31 அளவில் பூர்த்தியாக்குவதற்கு பட்டியலிடப்பட்டது.

### 1.3 செயற்திட்டத்தின் நடவடிக்கைகள்

உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் பகுதி ஏ.3 மற்றும் பீ.3 இன் கீழான நடவடிக்கைகள் கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

பகுதி ஏ.3- மாகாண வீதிகளின் புனரமைப்பு

வட மாகாணத்தின் யாழ்ப்பாண மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் அண்ணளவாக 100 கி.மீ மாகாண வீதிகள் மற்றும்

ஏனைய வீதி உட்கட்டமைப்பினை தரமுயர்த்தல் மற்றும் புனரமைத்தல்.

பகுதி பீ.3- பாராமரிப்பு நிகழ்ச்சித்திட்டம்

வட மாகாணத்தில் முன்னேற்பாடு செய்யப்பட்ட வீதி வலையமைப்பிற்காக ஒழுங்கு முறையான, தடுத்தல் ரீதியான மற்றும் அவசர பராமரிப்புக்களை மேற்கொள்ளுதலை உள்ளடக்கி செயற்றிறனான பராமரிப்பு உபாயத்தின் அபிவிருத்தியும் அமுலாக்கலும்.

பகுதி சீ - அமுலாக்கல் ஆதரவு மற்றும் இயலளவை கட்டியெழுப்பல்

தொழில்நுட்ப உதவி (செயற்திட்டத்தின் பகுதி ஏ இன் கீழ் வேலை ஒப்பந்தங்களை மேற்பார்வை செய்வதனை உள்ளடக்கி) பயிற்சி என்பவற்றை வழங்குதல், அலுவலக மற்றும் ஆய்வுகூட உபகரணங்களை கொள்வனவு செய்தல், தெரிவு செய்யப்பட்ட ஆய்வுகளை மேற்கொள்ளல் என்பவற்றினூடாக மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களம், திட்டமிடலும் பாதீட்டு முகாமைத்துவமும், செயற்திட்ட அமுலாக்கல் என்பவற்றிலுள்ள நிர்மாணக் கைத்தொழில்களின் இயலளவை வலுப்படுத்தல்.

## 1.4 நிதிசார் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கேற்ப தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்பித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்தின் அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில்

எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை அப்பரிசோதனை உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்றும் நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டு இருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) கட்டுநிதி நிதியக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்

(ஏ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதியிடல் நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துங்களுக்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கட்டுநிதி நிதியக் கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதியிடல் நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிச் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான செயற்திட்ட செலவினம் ரூபா 542,568,595 ஆக இருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 1,223,488,881 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பை பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| செலவின விடயம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013<br>ரூபா | 2012<br>ரூபா | ரூபா |
| சிவில் வேலைகள் | 459,483,141 | 370,277,508 | 978,802,668 |
| பொறி மற்றும் உபகரணம் | - | 1,982,186 | 6,645,200 |
| ஆலோசனை | 70,776,039 | 61,546,564 | 196,861,795 |
| அதிகரிக்கும் மற்றும் செயற்பாட்டுக் கிரயம் | 12,309,415 | 13,024,459 | 41,179,218 |

| | | | |
|---|---|---|---|
| | 542,568,595 | 446,830,717 | 1,223,488,881 |
| | ========== | ========== | ========== |

## 4.2 கட்டுநிதி நிதியக் கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களின்படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான கட்டுநிதி நிதியக் கணக்கின் செயற்பாடுகள் மற்றும் அத்திகதியில் உள்ளவாறு அக்கணக்கில் உள்ள மீதி என்பன கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

| | ஐ.அ.டொலர் | ரூபா |
|---|---|---|
| 2013 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 3,396,722 | 431,929,896 |
| கூட்டு :- மீள் நிரப்பல்கள் | 3,396,338 | 444,813,183 |
| வெளிநாட்டு நாணய மாற்று இலாபம் | - | 4,171,131 |
| | 6,793,060 | 880,914,210 |
| கழி :- பற்றுதல்கள் | 4,186,696 | 540,124,304 |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 2,606,364 | 340,789,906 |
| | ========= | ========== |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வேலையினை இடைநிறுத்தியிருந்த ஒப்பந்தகாரருக்கு செய்யப்பட்ட ரூபா 90,868,521 தொகையான தொழிலாரம்பிப்பு முற்பணங்கள் உத்தரவாத பிணைமுறிகள் ஊடாக அறவிடப்பட்டு பின்னர் திறைசேரிக்கு மீளளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அதன் மீது அவசியமான கணக்கீட்டுப் பதிவுகள் செய்யப்பட்டிருக்காததுடன் அதன் விளைவாக, செயற்திட்டச் செலவினம் அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) வேலையினை இடைநிறுத்தம் செய்திருந்த ஒப்பந்தகாரரின் ரூபா 62,987,352 பெறுமதியான செயலாற்றல் பிணைமுறி காசாக்கப்பட்டிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களிலுள்ள கணக்கிற்கு கொண்டுவரப்படாமல் மாகாண நிதிய கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

## 5.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

இலங்கை மின்சார சபைக்கு செலுத்த வேண்டிய ரூபா 50.7 மில்லியன் தொகையான மின்கம்பங்கள் மீளபொருத்துதல் மற்றும் தொலைத்தொடர்பு கம்பங்கள் தொடர்பான இரண்டு கொடுப்பனவுகள் மற்றும் ஸ்ரீ லங்கா ரெலிகொமிற்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 14.4 மில்லியன் என்பன ஒப்பந்தகாரருக்கு நேரடியாகச் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செய்யப்பட்ட கொடுப்பனவு விபரங்கள், வேலை மதிப்பீடுகள், பூர்த்தியாக்கல் அறிக்கைகள், நடைபெறும் வேலைகள் போன்றன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. .

## 6. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 6.1 நிதிகளின் பயன்பாடு

செயற்திட்ட அமுலாக்கல் கூறிக்கு மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உள்ளவாறான திரண்ட செலவினம் தொடர்பான முக்கிய சில புள்ளிவிபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| மூலம் | நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | வருடாந்த பாதீட்டில் செய்யப்பட்ட ஏற்பாடு | மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்ட தொகைகள் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | யூ.எஸ். டொலர் மில். | ரூபா. மில் | ரூபா. மில் | யூ.எஸ். டொலர் மில் | ரூபா. மில் | யூ.எஸ். டொலர் மில். | ரூபா. மில் |
| ஐடிஏ | 20.00 | 2,285.00 | 755.00 | 3.40 | 540.12 | 8.88 | 1,125.40 |
| ஜீஓஎஸ்எல் | - | - | 5.00 | - | 2.44 | - | 8.22 |
| மொத்தம் | 20.00 | 2,285.00 | 760.00 | 3.40 | 542.56* | 8.88 | 1,133.62* |

* அட்டுறு செலவினத்திற்காக செய்யப்பட்ட கணக்கீட்டு பரிகாரங்கள் காரணமாக மேற்குறிப்பிட்ட பட்டியலில் காட்டப்பட்ட தொகைகள் இந்த அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் காட்டப்பட்ட தொகைகளுடன் உடன்பட்டிருக்கவில்லை.

## 6.2. பௌதீக செயலாற்றல்

### 6.2.1 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொதி இலக்கங்கள் 03 மற்றும் 05 இன் ஒப்பந்தத்தை இடைநிறுத்துவதற்கு 2012 யூலை 25 இல் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தின் ஆலோசனை பெறப்பட்டிருந்த போதிலும், இரண்டு பொதிகளின் ஒப்பந்தங்கள் நான்கு மாதங்கள் கடந்த பின்னர் கூட 2012 நவம்பர் 23 இலேயே இடைநிறுத்தப்பட்டிருந்தது. இடைநிறுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் 15 மாதங்கள் தாமதத்தின் பின்னர் 2012 நவம்பர் 02 இலேயே திரும்ப வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்டத்தின் புனரமைப்பு பகுதியின் கீழ் செய்யப்பட்ட வேலையின் நோக்கெல்லையின் முரண் வழமையானதாக இருந்தது, ஆதலால் கள ஆய்வு இன்றி புனரமைப்பு வேலைகளிற்கான பீஓகியூ தயாரிக்கப்பட்டிருந்தமையை இது காட்டுகின்றது. பொதி இல 01 இன் கீழான ரூபா 58.82 மில்லியன் பெறுமதியான வேலைகள் மற்றும் பொதி இல 02 இன் கீழான ரூபா 39.03 மில்லியன் பெறுமதியான வேலைகள் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை மின்சார சபை மற்றும் ஸ்ரீ லங்கா ரெலிகொமிற்கு கம்பங்களை இடம்மாற்றுவதற்காக ரூபா 65 மில்லியன் கூட்டுமொத்தத் தொகையான கொடுப்பனவுகள் பொதி 02 இன் கீழ் 2013 ஆம் ஆண்டின் போது செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இடம்மாற்றுதல் வேலைகளின் முன்னேற்றம் மெதுவாக இருந்தது.

(ஈ) ஒப்பந்த நிபந்தனையின் டி-43 ஆம் பிரிவின் பிரகாரம், பூர்த்தியாக்கப்பட்ட வேலைகளானது வேலைகள் பூர்த்தியாக்கலின் பின்னர் 07 நாட்களிற்குள் செயற்திட்டத்தால் கையளிக்கப்பட்டிருக்கவேண்டும். எவ்வாறாயினும், 2012 ஒக்தோபர் 26 இல் பூர்த்தியாக்கப்பட்ட வேலைகள் ஏழு நாட்களிற்குள் செயற்திட்டத்தால் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2013 செப்தெம்பர் 03 இல் பொதி 02 இன் கீழ் பூர்த்தியாக்கப்பட்ட வேலைகள் நான்கு மாதங்கள் தாமதத்தின் பின்னர் 2014 சனவரி 13 இல் கையளிக்கப்பட்டிருந்தது.

(உ) ஒப்பந்த நிபந்தனையின் ஜீசீஜி55.1 ஆம் பிரிவின் பிரகாரம், ஒப்பந்தகாரர் ஆலோசனையாளரிடமிருந்து அங்கீகாரம் பெற்ற பின்னர் செயற்திட்ட பூர்தியாக்கல் திகதியின் மூன்று மாதங்களிற்குள் ‘‘கட்டிட படம்

வரைதல்களை'' சமர்ப்பிக்க வேண்டும். ஆனால், ஒப்பந்தகாரர் இந்த அறிக்கை திகதி வரை கூட அத்தகைய படம் வரைதல்களை சமர்ப்பித்திருக்கவில்லை.

## 6.3. சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ஒப்பந்த இடைநிறுத்தல் தொடர்பில் சட்ட ஆவணங்களைத் தயாரிப்பதற்கு மீளாய்வாண்டின் போது சட்டச் செலவினங்களாக ரூபா 443,372 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் சட்ட சேவைகளிற்காக முறையே ரூபா 70,000 மற்றும் ரூபா 50,000 மாதாந்த படிகளில் மாகாண சபையால் இரண்டு சட்ட உத்தியோகத்தரிகள் ஏற்கனவே நியமிக்கப்பட்டிருந்த போதிலும் வழக்கு தீர்ப்புகளிற்காக ரூபா 444,370 தொகை செலுத்தப்பட்டது.

## 6.4. சர்ச்சைக்குரிய விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 முதல் 2013 வரையான ஆண்டுகளிற்காக ஒருங்கிணைப்பு படியாக பிரதம செயலாளர், உட்கட்டமைப்புச் செயலாளர், பிரதி பிரதம செயலாளர் (நிதி) என்போருக்கு ரூபா 10,500,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் அடிப்படையில், 2013 நவம்பர் 28 இலிருந்து அமுலாகும் வகையில் படிகளை செலுத்துவதற்கு உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு செயலாளரிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்ட திகதிக்கு முன்னர் செய்யப்பட்ட கொடுப்பனவுகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாதாந்த ஒருங்கிணைப்பு படிகள் செலுத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் மாதாந்த வருமானம் ரூபா 50,000 ஐ விஞ்சியிருந்த போதிலும், 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் உழைக்கும் போதே செலுத்தும் வரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) முறையான் கணக்கேடுகளின் பேணுகை

(இ) முற்பணங்கள் மற்றும் கட்டுநிதி

(இ) ஒப்பந்த நிர்வாகம்